**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.05/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.26/2020**

1. கார்த்திகேயன்
2. சுப்பையா
3. முத்துலட்சுமி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

கிருஷ்ணத்தேவர் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 09.10.2025 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.M.அருள்துரை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை, அசல் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும் மற்றும் இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9-ன் கீழ், மனுதாரர்கள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்யும் கூடுதல் பதில் எதிர்வழக்குரை காலதாமதத்தினை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், இவ்வழக்கில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.04 16:59:42 +0530

எதிர்மனுதாரர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து விசாரணை நிலுவையில் உள்ளது என்றும், அவ்விதம் பிரதான வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்பொழுது கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை ரிசர்வ் செய்துள்ளார் என்றும், எனவே வழக்கின் சொத்து தொடர்பாக 2007ம் ஆண்டு ஆவணம் மற்றும் 1947ன் எல்கை மால்கள் மட்டுமே தபசில் சொத்தின் உரிமையை நிலைநாட்டவும் அடையாளம் காணவும் முடியும் என்றும், எனவே அது தொடர்பாக எதிர்வழக்குரையில் சொல்லாமல் விட்டுபோய்விட்டது என்றும், மேற்படி இவ்வழக்கில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை இவ்வழக்கில் அங்கீகரித்து கொள்ளவும் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையையும் ஓர் பாகமாக பாவித்துக்கொள்ள வேண்டியது அவசியமாய் அமைகிறது என்றும், மேலும் இத்துடன் தாக்கல் செய்யும் பதில் எதிர்வழக்குரை காலதாமதத்தினை மன்னித்து அங்கீகரித்து வழக்கின் மேல்விசாரணைக்கு உத்தவிடவேண்டியது அவசியமாய் அமைகிறது என்றும், இல்லாவிடில் ஈடுசெய்ய முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாய் இருக்கிறது என்றும், மேலும் இவ்வழக்கினை தொடர்ந்து நடத்த வாய்தா வாங்காமல் முழு ஒத்துழைப்பு தருவதாகவும், ஆகையால் மனுதாரர்கள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்யும் கூடுதல் பதில் எதிர்வழக்குரை காலதாமதத்தினை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக் கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :–

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், இவ்வழக்கின் வாதியான வா.சா.1–ஐ 27.11.2024 தேதியில் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டபோது பல வாய்தாக்கள் குறுக்கு விசாரணைக்கு மனுதாரர்கள் தரப்பில் கேட்கப்பட்ட பின்பு, காலபிற்பாடாக 27.02.2024 தேதிய எதிர்வழக்குரைக்கு முரண்பாடான கூடுதல் எதிர்வழக்குரையை அங்கீகரிக்க வேண்டும் என இம்மனுவை 14.02.2025 தேதியில் தாக்கல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.04 16:59:51 +0530

செய்து வழக்கின் விசாரணையை காலம் கடத்தி வருகிறார் என்றும், எனவே மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரை காலதாமதத்தினை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கானது தற்போது வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் வழக்கின் சொத்து தொடர்பாக 2007ம் ஆண்டு ஆவணம் மற்றும் 1947ன் எல்கை மால்கள் மட்டுமே தபசில் சொத்தின் உரிமையை நிலைநாட்டவும் அடையாளம் காணவும் முடியும் என்றும், எனவே அது தொடர்பாக எதிர்வழக்குரையில் சொல்லாமல் விட்டுபோய்விட்டது என்றும், மேற்படி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.04 16:59:58 +0530

இவ்வழக்கில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை இவ்வழக்கில் அங்கீகரித்து கொள்ளவும் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையையும் ஓர் பாகமாக பாவித்துக்கொள்ள வேண்டியது அவசியமாய் அமைகிறது என்றும், மேலும் இத்துடன் தாக்கல் செய்யும் பதில் எதிர்வழக்குரை காலதாமதத்தினை மன்னித்து அங்கீகரித்து வழக்கின் மேல்விசாரணைக்கு உத்தவிடவேண்டியது அவசியமாய் அமைகிறது என்றும், இல்லாவிடில் ஈடுசெய்ய முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாய் இருக்கிறது என்றும், மேலும் இவ்வழக்கினை தொடர்ந்து நடத்த வாய்தா வாங்காமல் முழு ஒத்துழைப்பு தருவதாகவும் கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) இம்மனுவின் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கின் வாதியான வா.சா.1–ஐ 27.11.2024 தேதியில் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டபோது பல வாய்தாக்கள் குறுக்கு விசாரணைக்கு மனுதாரர்கள் தரப்பில் கேட்கப்பட்ட பின்பு, காலபிற்பாடாக 27.02.2024 தேதிய எதிர்வழக்குரைக்கு முரண்பாடான கூடுதல் எதிர்வழக்குரையை அங்கீகரிக்க வேண்டும் என இம்மனுவை 14.02.2025 தேதியில் தாக்கல் செய்து வழக்கின் விசாரணையை காலம் கடத்தி வருகிறார் என்றும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) இம்மனுவின் எதிர்மனுதாரரால் காலதாமதமாக மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதை தவிர வேறு எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை.

11) மேலும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்வதால் அசல் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கும், தரப்பினர்களுக்கு இடையே மேலும் பல வழக்குகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், மனுதாரர்கள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.11.04 17:00:06 +0530

12) இருப்பினும், இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதுபோல இம்மனுவானது வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மிகவும் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை மிகவும் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**<u>14) இறுதியாக</u>**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 01.12.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 01.12.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.04 17:00:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :- - இல்லை -

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.04 17:00:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.05/2025
in
O.S.No.26/2020
உத்தரவு (Draft / Fair)

நாள் : 04.11.2025